**குற்றவியல்நீதித்துறைநடுவர்நீதிமன்றம்எண்.1,**

**ஜெயங்கொண்டம்.**

**C.C.No. 213/2019**

பெயர் – திருமதி. கண்ணகி அ.சா. 02

க/பெ.சிவமுதலி நாள் 08.06.2026

(எதிரிகள் ஆஜர்)

**சாட்சி மனுவில் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் நடுகொல்லை என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் மூலை கொல்லையில் இருந்தேன் என்றால் எனது கணவர் கொல்லையின் ஒரு மூலையில் இருந்தார். நான் அதே கொல்லையில் மற்றொரு மூலையில் களை கொத்திக்கொண்டு இருந்தேன். சத்தம் கேட்டு பார்த்தேன். நான் என் கணவருக்கு அருகில் செல்வதற்குள் சண்டை முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் சென்றபிறகுதான் எதிரிகள் என் கணவரை தாக்கினார்கள். எதிரிகள் என் கணவரை கையில் வைத்திருந்த மண்வெட்டியால் சுழற்றி இடது கை தோள்பட்டையில் அடித்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2) எனது கணவருக்கு தோள்பட்டையில் உள்ள மூட்டு இறங்கிவிட்டது என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2வது எதிரி அவனை விட்டுவைக்க கூடாது, அவனை பிடி அடி என்றும், 1வது எதிரி என்னை வாடி போடி என்று திட்டினார் என்று

போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் நானும் என் கணவருடன் இருக்கும்போதுதான் போலீசார் எனது கணவரை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்குஎன் கணவரை யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் யார் என்று தெரியவில்லை. கருப்பையன் என்பவர் என் கணவரின் சகோதரர் என்றால் சரிதான். சண்டை நடந்ததாக சொல்லும்போது எங்கள் கொல்லைக்கு அருகில் யார் யார் இருந்தார்கள் என்றால் பக்கத்து கொல்லைக்காரரர் சித்ரா இருந்தார். சண்டை நடக்கும்போது வந்தார். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே உள்ள இடப்பிரச்சனை காரணமாக என் கணவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வாங்க நினைத்த கொல்லையை எதிரிகள் வாங்கியதால் அவர்கள் மீது விரோதம் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/–P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.